2015 செப்டம்பர் 15]

கொண்டு சென்று, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 258 மற்றும் 259 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

260—

நவீன அரிசி ஆலை

***991 திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமானூரில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, அந்தப் பகுதியிலே ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவர்களுக்கு 25 சதவிகிதம் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற பல்வேறு மானியங்களை வழங்கும். அதன்மூலமாக அவர்கள் பயன்பெறலாம். எனவே, இந்தத் தொழில்களை நடத்த அவர்கள் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு இந்த மானியங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா

அவர்களின் அரசு தரும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகன் அண்ணா அவர்களின் கருத்துகள்; 'மக்களிடம் செல்! அவர்களோடு வாழ்! அவர்களிடம் கற்றுக்கொள்! மக்களை நேசி! மக்களுக்கு சேவை செய்! மக்களுக்காகத் திட்டமிடு! செயல்படு!' போன்றவையாகும். அண்ணாவின் கருத்துகளையெல்லாம் அரசுடைமையாக்கி, பேரறிஞர் அண்ணாவின் குடும்பத்திற்கு 75 இலட்சம் ரூபாயை வழங்கியவர் அண்ணாவின் கருத்துகளை ஏற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்தது உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு; நம் இலட்சியமோ இலட்சம் கோடி ரூபாய். மாண்புமிகு அம்மா அவர்களின் நான்கு ஆண்டு கால ஆட்சியில் அமைதியான தமிழ் மண்ணின் ஒளியின் மிகையால், சாலையின் சிறப்பால், காவேரி, முல்லைப் பெரியாறு இவற்றின் சிறப்பால், வான் நிலவும் வேண்டி நிற்கும்; வசந்தங்கள் பூத்திருக்கும்; என் தாயின் தமிழ் பூமியே சிறந்த பூமியென உலகத் தொழில் முனைவோர் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரத்தால் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் அளவிற்குத் தொழில் தொடங்க ஒப்பந்தம் போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உலகத் தொழில் சந்தை எனத் தமிழகம் உருவெடுக்கப் போகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என, யானை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரை சீமையைத் தழுவுகின்ற அன்னை தந்த பொன்னி நதி நீரால், புஞ்சையும், நஞ்சையும், இசையும், கலையும் கொஞ்சிடும் தஞ்சைக்கு அருகிலுள்ள அரியலூர் தொகுதி, திருமானூர் பகுதியில் நவீன அரிசி ஆலையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதியைப் பொறுத்தமட்டில், 14,350 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டு, 74,030 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. திருமானூர் ஒன்றியத்தில் மட்டும் 8,214 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டு, 53,916 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அரியலூர் மாவட்டத்தில் மட்டும் 43 அரிசி ஆலைகள் உள்ளன. அரியலூர் தொகுதியிலே மாத்திரம் 21 அரிசி ஆலைகளும், திருமானூர் ஒன்றியத்தில் 18 தனியார் அரிசி ஆலைகளும் உள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஸ்ரீபுரந்தான், சாத்தமங்கலம், வேலாக்குறிச்சி, கீழக்காவட்டாங் குறிச்சி, மேலக்குடிக்காடு, செந்துறை ஆகிய 7 இடங்களில் நவீன அரிசி ஆலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இந்த அரிசி ஆலைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 14.87 இலட்சம் ரூபாயும், மின்னாக்கி மானியமாக 1.69 இலட்சம் ரூபாயும், மின் மானியமாக 38,050 ரூபாயும் வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அரசின் சார்பாக நேரடியாக இத்தகைய நவீன அரிசி ஆலைகளை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், அரசின் மானியங்களைப் பெற்று அங்கே தொழில் முனைவோர் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். தமிழகத்தில் வளர்ந்த மாவட்டங்களில் தனி மனித ஆண்டு வருமானம் சராசரியாக ரூ.20,100/- வரை உள்ளது. ஆனால், அரியலூர் மாவட்டத்தில் தனி மனித சராசரி ஆண்டு வருமானம் குறைந்த அளவாக ரூ.6,700 வரைதான் உள்ளது.*

சென்ற ஆட்சியாளர்கள் தனக்கு வேண்டியவர்களுக்காக பெரம்பலூரிலிருந்து அரியலூர் மாவட்டத்தைப் பிரித்தார்களே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகம் தவிர வேறு எந்த அலுவலகமும் இங்கு இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2011-ல் பதவியேற்றவுடன், அனைத்துத் துறை அலுவலகங்களையும் அரியலூருக்குக் கொடுத்து, துறை அலுவலகங்களுக்குத் தேவையான கட்டட வசதிகளையும் செய்து கொடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) உலக அளவில் உயர்ந்து நிற்கும் கட்டடங்களுக்குத் தேவையான சிமெண்ட்டை உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய மாவட்டம் அரியலூர் மாவட்டம். வளர்ச்சி பெறாத மாவட்டம். எனவே, மாவட்ட மக்களின் நலன் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலையை அமைக்கவும், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உலகத் தொழில் முனைவோர் மூலமாக ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையை அரியலூர் மாவட்டத்தில் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலீட்டாளர்கள் மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. அதன்மூலம் ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அங்கு தொழிற்சாலையை அமைத்துத் தருவார்களா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தமட்டில், தென் மாவட்டங்களில் மிக அதிகமான தொழில்களைக் கொண்டு வர வேண்டுமென்ற மிகப் பெரிய எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள். அதன் மூலமாக அரியலூர் பகுதியில் தொழில்கள் எல்லாம் வர இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக அரியலூர் பகுதிக்கும் நல்ல தொழிற்சாலைகளெல்லாம் வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 15]

அரியலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், திருமானூர் பகுதியில் 18 அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்ற காரணத்தினால் திருமானூர் பகுதியில் அரசின் சார்பாக நவீன அரிசி ஆலையைத் தொடங்குகின்ற உத்தேசம் தற்போது இல்லை. எதிர்காலத்தில் வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுமேயானால், அந்தப் பகுதியில் ஆய்வு செய்து. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

258—

மின் வாரிய அலுவலகம்

***53560 திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்தில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்திற்கான மின் வாரியப் பிரிவு அலுவலகம் 3 கி.மீ. தொலைவில் உள்ள பேராம்பட்டில் உள்ளது. பேராம்பட்டு பிரிவு அலுவலகத்தின்கீழ் 123 மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. வாரிய விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருந்தால் மட்டுமே பிரிவு அலுவலகம் தனியாக அமைக்க முடியும். எனவே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், ஆண்டியூர் கிராமத்தில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.